# சுதந்திரன்
SUTANTIRAN



வள்ளுவர் ஆண்டு 2008
புரட்டாதி 30
துல்ஹஃதா 2
ஞாயிறு (16-10-1977)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 37
தொலைபேசி: 352
விலை சதம் 60


# கட்டாய சிங்களத் திணிப்பை கடுமையாக எதிர்ப்போம்!

## மும்மொழித் திட்டம் தமிழனுக்கு கொள்ளிவைக்கும் சட்டம்!

**அரசாங்கம் பாடசாலைகளில் புகுத்த திட்டமிட்டு வருவதாகச் சொல்லப்படும் மும்மொழித்திட்டத்தை தமிழினம் கடுமையாக எதிர்க்கிறது. இத்திட்டம், ஆட்சிமொழியான சிங்களத்தை தமிழ் மாணவர்களின் தொண்டைக்குள் பலவந்தமாக திணிக்கின்ற ஒரு திட்டம் என்றே கருதப்படுகிறது.**

ஈழத்தமிழர்களுக்கும். அவர்களது மொழி, கலை கலாசாரங்களுக்கும். அவர்களது தாயகத்திற்கும் உரிமையும் சுதந்திரமும் மறுக்கப்பட்டுள்ள இன்றைய நிலையில். அதிகார மொழியான சிங்களத்தை கட்டாய பாடமாக படிப்பது தமிழ் சமுதாயத்தின் அழிவுக்கே வழிவகுக்குமென்று தமிழ் அரசியல் தலைவர்கள், கல்வியாளர்கள், பெற்ருர் ஆசிரிய சங்கத் தலைவர்கள், பெற்ருேர்கள் மாணவர்கள் ஆகியோர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சிங்கள மொழிக்கும் சிங்கள இனத்துக்கும் அரசியல் சட்டரீதியாகப் பாதுகாப்பு தரப்பட்டுள்ளது; சிங்களம் மட்டுமே ஆட்சிமொழியாக இருக்கிறது; சிங்களமக்களை கவனிக்க அவர்களுக்கென்று ஓர் அரசு—ஆட்சி—இருக்கிறது; இந்நிலையில் சிங்களவர்கள் தமிழையும் படிக்கலாம்; வேறு எந்த மொழியையும் படிக்கலாம்—அதனுல் அவர்களுக்கு எந்தவித நட்டமும் இல்லை.

ஆனுல் தமிழ் மக்களோ இந்நாட்டில் அடிமைகளாக்கப்பட்டுள்ளனர்; ஆளப்படும் இனமாக்கப்பட்டுள்ளனர்; தமிழ் மொழிக்கும், இனத்துக்கும், அரசியல் சட்டரீதியான பாதுகாப்போ, உரிமைகளோ உத்தரவாதம் செய்யப்படவில்லை; தமிழ்பேசும் மக்களின் தாயகத்துக்கு சுதந்திரம் தரப்படவில்லை; தமிழினம் மிதிக்கப்பட்டு நசுக்கப்பட்டு வருகிறது; இந்நிலையில்—மும் மொழித்திட்டம் என்ற போர்வையில் கட்டாய சிங்களத்தை தமிழர்களின் தொண்டைக்குள் திணிக்க முயற்சியெடுக்கப்படுகிறது; இதை நாம் அனுமதித்தால்— கட்டாய சிங்களத்தை ஏற்ருல்— தமிழினம் நிச்சயமாக அழிவு நோக்கியே தள்ளப்படும்!

1965ம் ஆண்டு தமிழரசுக் கட்சி ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கத்துடன் ஒத்துழைத்தபோது, அப்போதும் இந்த 'மும்மொழித் திட்டம்' முன்வைக்கப்பட்டது. இத் திட்டத்தை மூதறிஞர் தந்தை செல்வா அன்று கடுமையாக எதிர்த்தார்; தமிழ் மக்களுக்கு தமிழும் ஆங்கிலமும் போதும்; சிங்களம் வேண்டியதில்லை; சிங்களத்தை ஏற்பது தற்கொலைக் கொப்பானது என்று அவர் அன்று தீர்க்க தரிசனத்துடன் சுட்டிக் காட்டியிருந்தார்.

அன்று இருந்த நிலையை விட இன்று இன்னும் மோசமாகியுள்ளது. எனவே மும் மொழித்திட்டம் என்ற போர்வையின் கீழ். தமிழ் மக்களின் தொண்டைக்குள் கட்டாய சிங்களத்தை திணிக்க அரசு சட்டம் இயற்றுமாஞல் அதை தமிழினம் தன்பலங்கொண்ட மட்டும். எதிர்த்துப்போராடவேண்டியேற்படும்!

இவ்வாருனகருத்தை சுதந்திரன் நிருபர் சந்தித்த பலரும் வெளியிட்டனர்.

## சிங்கள இனவெறியை தூண்டுவது யார்?

"மன்ஞரில் வாழும் சிங்களமக்களின் தோலை உரித்து சப்பாத்து தைத்து காலில் அணிவோம் என்றும், சிங்களவர்களின் இரத்தத்தில் நீந்துவோம் என்றும் மன்ஞரில் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் வகுப்பு வாதத்துக்கு தேர்தல் காலத்தில் தூபமிட்டார்கள் என்று எனக்கு ஒரு மகஜர் கிடைத்துள்ளது.''

—மேற்கண்டவாறு பொறுப்பு வாய்ந்த தேசியஅரசுப்பேரவையில் பொறுப்பு வாய்ந்த ஓர் அமைச்சர் பொறுப்பற்ற முறையில் சிங்கள இன வெறியை தூண்டிவிடும் வகையில் துவேஷ வாந்தியெடுத்திருக்கிருர்!

மேற்கண்டவாறு பேசியவர் கைத்தொழில் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ.

அமைச்சருக்கு ஒரு சவால்! மேற்கண்டவாறு தமிழர் கூட்டணியைச் சேர்ந்த யார் எப்போது எங்கே எந்தத்திகதியில் பேசிஞர் என்பதை உம்மால் நிருபிக்க முடியுமா?; நிருபிக்க முடியா விட்டால் இப்படி பொறுப் பற்று ஏன் பேசுகிறீர்கள்?

சிங்களவர்களை தமிழர்களுக்கு எதிராக ஏன் தூண்டிவிடுகிறீர்கள்?

## தமிழ் அகதிகளுக்கு லண்டனிலிருந்து 800 பவுண் நிதி உதவி!

சிங்கள இனக்கொடுமையால் பாதிப்புக்குள்ளான தமிழ்ஈழ அகதிகளுக்கு உதவிபுரியும் நோக்குடன் அண்மையில் லண்டனில் இயங்கும் தமிழ் இயக்கங்கள் ஒரு நிதி உதவிக்காட்சியை லண்டனில் நடத்தின; இக் காட்சியின் போது 800 பவுண் சேர்ந்ததாகத் தெரிகிறது: 'அபூர்வராகங்கள்' திரைப்படமே நிதி உதவிக் காட்சிக்காக பயன்படுத்தப்பட்டது.

இதேமுன்மாதிரியைப் பின்பற்றி கனடா, அமெரிக்கா, சிங்கப்பூர், மலேசியா, இந்தியா ஆகிய நாடுகளிலுள்ள தமிழர்களும், ஈழத்தமிழர்களின்கண்ணீர் துடைக்க முற்படக் கூடும்.

## சுதந்திரன் ஊழியர் குடும்பத்தில் நிகழ்ந்த இனவெறிப் படுகொலை!

சுதந்திரன் பத்திரிகையின் அச்சகப்பகுதியில் போர்மனுகக் கடமையாற்றி வரும் திரு. இரத்தினராஜ் செம்சன் பவர் அண்மையில் நடைபெற்ற சிங்கள இன வெறிக்கொடுமையின்போது தன்னுடைய அருமைத் தந்தையையும் சகோதரரையும் ஒருசேர இழந்தார்.



டி. எஸ். யேசுதாசன்

மகரகமையை அடுத்துள்ள வத்தகெதரையில் 26 ஆண்டுகளாக தொடர்ந்து வசித்துவந்த செம்சன் பவருடைய வீட்டுக்குள் புகுந்த சுமார் 30 சிங்கள வெறியர்கள், அவரது 70 வயது தந்தையான திரு. டி. எஸ். யேசுதாசனையும், 26 வயதுடைய சகோதரர் திரு. சாள்ஸ் யேசுபாதத்தையும் வாளால் துண்டுதுண்டாக வெட்டிக் கொன்றனர். இந்தக் கொடூரக்காட்சி செம்சன் பவரது கண்முன்னுலேயே நடைபெற்றது.

சிங்கள இன வெறியர்களால் வெட்டப்பட்டு படுகாயமடைந்த மற்ருேர் சகோதரரான டேவிட் யேசுதாசன் (வயது 30) இப்போது கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகிருர்.

படுகொலை செய்யப்பட்ட செம்சன்பவருடைய தந்தை சகோதரர் ஆகியோரையும், காயமடைந்து சிகிச்சை பெற்றுவரும் அவரது சகோதரரையும் படத்தில் காணலாம்.



சாள்ஸ் யேசுபாதம் யேசுதாசன்



டேவிட் யேசுதாசன்

**தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழத் தமிழரின் உரிமை முழக்கம்

இலங்கையின் ஒரு கோடியே 40 இலட்சம் மக்கள் தொகையில் 72 சத விகிதத்தினர் சிங்களவர்.

11.1 சதவிகிதத்தினர் ஈழத்தமிழர். 9.4 சத விகிதத்தினர் இந்தியத் தமிழர்.

மத அடிப்படையில் பார்த்தால் பெரும்பான்மையான சிங்களவர்கள் புத்தமதத்தினர்.

பெரும்பான்மையான தமிழர் இந்துக்கள்.

மொத்தத்தில்முஸ்லீம்கள் 7 சதவிகிதத்தினர் தான்.

மொழியில் மட்டுமல்ல மத அடிப்படையிலும் இரு இனத்தார்க்கும் தகராறு மூண்டது.

'ஈழத் தமிழரின் உரிமை முழக்கம்' என்ற தலைப்பில்தி.மு.க ஏடானமுரசொலியில் அதன் ஆசிரியர் திரு. மாறன் எம். ஏ. அவர்கள் ஈழத் தமிழர் பிரச்சினையையொட்டி எழுதியிருந்த கட்டுரையின் முதலாவது பகுதி சென்ற இதழ் சுதந்திரனில் வெளியாகியிருந்தது. இரண்டாவது பகுதி இங்கு தரப்படுகிறது.

1972-ஆம் ஆண்டு அரசியல் சட்டம் புத்தமதத்திற்குப் பிரதான இடம் அளிக்கிறது.

"புத்தமதத்தைக் காப்பாற்றுவதும், வளர்ப்பதும் அரசாங்கத்தின் கடமை" என்று அரசியல் சட்டம் கூறுகிறது.

—எனவே, இந்தியா போல இலங்கை ஒரு மதச்சார்பற்ற நாடல்ல—என்பது குறிப்பிடத்தக்கது.

நாட்டுப்பண் இசைக்கப்படுமேயானல் பிரதமரிலிருந்து சாதாரணக் குடிமகன் வரை எழுந்து நின்று மரியாதை தெரிவிப்பதுதான் உலக வழக்கம்.

ஆனல், இலங்கையின் நாட்டுப்பண் இசைக்கப்படும்போது புத்த சாமியார்கள் மட்டும் எழுந்து நிற்கமாட்டார்கள், காரணம், அவர்கள் அதற்கெல்லாம் அப்பாற்பட்டவர்களாம்!

—இந்த இரண்டு இனங்களின் பகைமை முற்றி வளர்வதற்கு புத்த மதச் சாமியார்களும் ஒரு காரணமாவர்!

இவர்கள்தான் புத்த மதத்தையும் சிங்களமொழியையும் ஒன்ருக இணைத்து ஒரு தீவிர உணர்விற்கு ஈட்டி முனையாகத் திகழ்ந்தனர்.

இதை நன்ருக அரசியலுக்குப் பயன்படுத்திக் கொண்டபெருமை திரு. சலமன்பண்டாரநாயகாவையே சாரும்.

"கிராமங்களிலும் நகரங்களிலும்; வியாபார நிறுவனங்களிலும், மற்ற இடங்களிலும் எல்லா உத்தியோகங்களும் தமிழ்மொழி பேசுவோர் கையிலிருப்பது சிங்கள மொழியைச் சுருக்குவதில் தவிர்க்க முடியாதபடி முடிந்துவிடும் என்கிற பயத்தை எற்படுத்தி விடும் இது நியாயமாக எழுகின்ற பயமே"

—1955ல் இவ்வாறு திரு. பண்டாரநாயகா பாராளுமன்றத்தில் பேசினர்.

இதைத்தொடர்ந்து சிங்கள மொழி இலங்கையின் ஆட்சி மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்கிற தீர்மானத்தை 1944ல் இன்றைய பிரதமர் திரு. ஜெயவர்தனே முன்மொழிந்தார்.

கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை சிங்களவர்களைவிட தமிழர்கள் அதிகமாக இருந்ததும்; மக்கள் தொகையில் தங்களது எண்ணிக்கையை விட தமிழர்கள் அதிக சத விகிதம் உத்தியோகங்களைப் பெற்றிருந்ததும் உண்மை தான். ஒரு சமயம் 40 சத விகித 'செகரட்டரிகள்' தமிழர்களாக இருந்தார்கள், ஆனல் 1970லிருந்து அரசு உயர் ஊழியங்களுக்குத் தமிழர்கள் நியமிக்கப்படுவது இல்லை. சென்ற ஆண்டு ஒரே ஒரு 'செகரெட்டரி' தான் தமிழராக இருந்தார்!

தமிழர்களை இரண்டாந்தரக் குடிமக்களாக்க சிங்கள மொழிதேர்ந்தெடுக்கப் பட்டது.

1956ல் திரு. பண்டாரநாயகா பிரதமரானதும் செய்த முதல் வேலை "இனி சிங்களம் மட்டுமே இலங்கையின் ஒரே ஒரு ஆட்சி மொழியாகஇருக்கும்" என்று சட்டம் கொண்டு வந்தது தான்!

பிறகு 'தமிழ் மொழிச் சட்டம்' என ஒன்று கொண்டு வரப்பட்டு தமிழ் மொழி பேசுவோருக்கு சில சலுகைகள் கொடுக்கப்பட்டன. ஆனல் சிங்கள தீவிரவாதிகளின் முயற்சியால் அந்தச் சட்டம் உயிர்பெறவேயில்லை

ஒரே நாளில் சிங்களம் அரசு கட்டிலேறியது; தமிழ் முடியிழந்தது; தமிழர்கள் தங்கள் சொந்த பூமியில் இரண்டாந்தரக் குடிமக்களாயினர்!

அதன் பிறகு தமிழர்களுக்கு சோதனைமேல் சோதனை!

இலங்கைப் பல்கலைக் கழக சட்டம் கொண்டு வரப்பட்டு தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைப்பது தடுக்கப்பட்டது!

பல்கலைக் கழகத்தில் உயர் கல்வி பெறுவதற்கு மாவட்டத்திற்கு இவ்வளவு 'கோட்டா' என்று நிர்ணயிக்கப்பட்டது. இதனல் உயர்கல்வி பெறும் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கைக்கு உச்ச வரம்பு கட்டப்பட்டது.

கிராமப் புறங்களிலிருந்து வரும் மாணவருக்கு உதவுவதற்காக என்று கூறி மருத்துவக் கல்லூரியிலும், பொறியியல் கல்லூரியிலும் சேரும் மாணவர்கள் பெற்ற 'மார்க்கு'களில் ஒரு 'சமநிலைப்படுத்தும் முறை' Standardising admission marks) புகுத்தப்பட்டது. இதனல் திறமைவாய்ந்த தமிழ்மாணவர்கள் தொழிற் கல்லூரிகளுக்குள் நுழைய வில்லை, மத்திய தர வர்க்க சிங்களவர்களுக்கும் இதுஎதிராக இருந்தாலும் தமிழர் விரோதம் காரணமாக இது அமுல்படுத்தப்பட்டது.

(புதிய பிரதமர் இதை நீக்கிவிட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.)

பாராளுமன்றத்தில் தமிழ் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைக்க திட்டமிட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

தமிழர்கள் எதைத் தங்கள் பூர்வீக தாயகம் என்று கருதிக் கொண்டிருக்கிருர்களோ அங்கெல்லாம் சிங்களவர்கள் குடியேற்றப்பட்டார்கள்.

தமிழர் வாழும் பகுதியின் இதயம் போன்ற இடத்தில் 'கல்ஓயா' அணை கட்டப்பட்டது. அதைக்காரணம் வைத்துச் சிங்களத் தொழிலாளிகள் அங்கு குடியேற்றப் பட்டார்கள்.

அரசுத்துறையைச்சேர்ந்த வாரியங்கள் தமிழர் வாழும் பகுதிகளில் பண்ணைகளை அமைத்து அதில் சிங்களவர்களைக் குடியேற்றியது.

கந்தலை எனும் இடத்தில் சர்க்கரை ஆலை துவக்கப்பட்டது. ஆனல் அதில் பணிபுரிவோரில் பெரும்பான்மையோர் சிங்களவரே!

உலக வங்கி அளிக்கும் நிதி உதவிகளில் பல பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் உருவாக்கப்படுகின்றன. ஆனல் தமிழர் பகுதியை வளமாக்க எந்தத் திட்டமும் கிடையாது!

—1970 முதல் 1977 வரை திருமதி பண்டாரநாயகா ஆட்சியில் தமிழர்கள் இப்படித்தான் இரண்டாந்தர, மூன்ருந்தர குடிமக்களாக்கப்பட்டனர்!

1972-ஆம் ஆண்டில் இலங்கை குடியரசாகியது. அந்த அரசியல் சட்டம் தமிழர் பகுதிகளில் தமிழ் வழங்கப்படுவதையும் தடைசெய்தது.

பிரிட்டிஷ் ஆட்சியில் கிறித்தவர்களும் உயர்கல்வி பெற்று, உத்தியோகங்களில் பெரும்பங்கு பெற்று வந்தனர்.

—1961ல் திருமதி பண்டாரநாயகா அரசு கிறித்துவ பள்ளிகளையும் தேச உடமையாக்கியது.

யாழ் பகுதித் தமிழர்கள் சிறந்த கல்வியறிவுபெற்று விளங்குவதற்கு கிறித்துவப் பள்ளிகளும் காரணம். அங்குள்ள செயிண்ட் ஜான் கல்லூரி புகழ்பெற்றது. பண்டாரநாயகா அரசு அங்குள்ள தமிழர்களைக் கலக்காது அதையும் எடுத்துக் கொண்டது.

மொழி இல்லை
தரமான கல்வி இல்லை
தொழிற் கல்வியும் இல்லை
உத்தியோகம் இல்லை
வாழ்வில் வளம் இல்லை

—இவற்ருேடு, உயிருக்கும் உடமைக்கும் இருக்கின்ற இடத்திற்கும் ஆபத்து என்ருல், பாவம். தமிழர்கள் என்ன செய்வார்கள்?

தமிழர்கள் துவக்கத்திலேயே தனிநாடு கோரவில்லை.

1957-ல் பண்டாரநாயகா—செல்வநாயகம் ஒப்பந்தம் ஏற்பட்டது. அது நிறைவேறியிருந்தால் ஒருக்கால் இலங்கையில் பிரச்சினை தீர்ந்திருக்கும். அதுவும் நடக்கவில்லை.

உள்ளாட்சித் துறைகளுக்கு அதிக அதிகாரங்கள் அளிப்பதாக வாக்களித்த தன்பேரில் திரு. திருச்செல்வம் திரு. டட்லி சேனநாயகா அமைச்சரவையில் சேர்ந்து அமைச்சரானர். வாக்குறுதி நிறைவேருத காரணத்தால் மனம் சோர்ந்துஅவரும் விலகினர்.

சிங்களவெறி அதிகமாக ஆக— தமிழர்களும் வேறு வழியின்றி அதே நாணயத்தால் திருப்பிக் கொடுக்க வேண்டியவர்களாகி விட்டார்கள். மாநில சுயாட்சியோடு கூடிய கூட்டாட்சி கேட்டவர்கள் இப்போது 'தமிழ் ஈழம்' என்கிற பெயரில் சுதந்திர சோஷலிசத் தனிநாடு கேட்கிருர்கள்.

"நாங்கள் இரண்டு தனி இனங்கள் எங்களுக்கிடையில் பொதுவானது எதுவும் கிடையாது. நாங்கள் இரு மாறுபட்ட மொழிகளைப் பேசுகிறேம். நாங்கள் இரு மாறுபட்ட கடவுள்களை வணங்குகிறேம்."

—இது திரு. திருச்செல்வம் கூறியது.

"தமிழர்களும், சிங்களவர்களும் எப்போதும் தனித் தனியான மக்கள். அவர்கள் எப்போதும் ஒன்றுபட்டு வாழ முடியாது. அச்சு வார்க்கப்பட்டுவிட்டது. நாங்கள் பிரிந்துவிட முடிவு செய்து விட்டோம். எப்படி—எப்போது— என்பதுதான் கேள்வி"

—இது திரு. செல்வநாயகம் கூறியது!

"ஸ்காட்லந்திற்கும் மேற்குக்கும் சட்ட சபைகள் அமைத்து அதிகாரத்தைப் பரவலாக்க பிரிட்டன் முயன்று வருகிறது; கானடாவில் பிரெஞ்சு மொழி பேசுவோரின் உரிமையையும் தனி அடையாளத்தை யும் மதித்து; அங்கு பிரெஞ்சு மொழிபேசுவோருக்கும், ஆங்கில மொழி பேசுவோருக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டு கானடா வலுவான அரசாக்கப்பட்டிருக்கிறது. இலங்கை இதிலிருந்து பாடம் கற்க வேண்டும்.

—இப்படிக் கூறுகிருர் பேராசிரியர் நேசையா.

சின்னஞ்சிறிய நாட்டில் இன்னெரு கூரு? கூடாது! தமிழ் மொழி பேசுவோருக்கு ஒரு மாநில அரசு, சிங்களவருக்கு ஒரு மாநில அரசு, இரண்டிற்கும் சேர்த்து ஒரு மத்திய அரசு— இப்படி இந்தியாவில் இருப்பதுபோல ஒரு கூட்டாட்சி முறையை வகுத்துக்கொண்டால் என்ன?

—தூரத்திலிருப்பவர்களுக்கு இதுவே சரியான பரிகாரமாகத் தெரிகிறது.

இந்தியாவிலிருப்பது போல ஒரு கூட்டாட்சியா? நினைத்த நேரத்தில் கவிழ்ப்பதற்கா? அண்மையில் தி. மு. க. ஆட்சியைக் கவிழ்த்ததை நாங்கள் மறந்துவிடவில்லையே! அது மேலும் இரு இனத்தாருக்கும் குரோதத்தைத்தான் வளர்க்கும்!

—தமிழ் ஈழத்திலிருந்து இப்படி ஒரு பதில் வருகிறது.

தமிழர் விடுதலை முன்னணித் தலைவர்கள் இந்தத் தேர்தல் முடிவுகள் பிரிவினைக்கான ஒரு வாக்கெடுப்பு— என்று கூறுகின்றனர்.

ஒருசமயம் நெப்போலியன் திரிகோணமலையைக் கட்டுப்படுத்துகிறவர்கள் இந்து மகா சமுத்திரத்தைக் கட்டுப்படுத்துவார்கள்— என்று கூறினுன்.

—எனவே சுதந்தரத் தமிழ் ஈழம் தனித்து வாழ முடியும் என்று அவர்கள் நம்புகின்றனர். பகிரங்கமாக அன்னிய உதவியையும் நாடுவதாகச் சிலர் அறிவித்திருக்கின்றனர்.

தனிநாடு கோரிக்கைதான் வன்முறைக் கிளர்ச்சிக்குக் காரணம் என்பதை தமிழ் ஐக்கிய முன்னணியின் பொதுச்செயலாளர் திரு. அமிர்தலிங்கம் மறுக்கிருர்.

"இரண்டரை ஆண்டுகளுக்கு முன்பே நாங்கள் தனிநாடு கோரிக்கையை வைத்து அன்று முதல் போராடிவருகிறேம். அப்போதெல்லாம் வன்முறை தலைதூக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. சென்ற தேர்தலில் மக்கள் கொடுத்த தீர்ப்பையொட்டி நாங்கள் இன்னும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை. அடுத்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்பு அரசாங்கம் என்ன செய்யப்போகிறது என்பதை அறிய நாங்கள் காத்திருப்போம் என்று நாங்கள் அறிக்கை விடுத்திருக்கிறேம்."

—இது செப்டம்பர் முதல் தேதி திரு. அமிர்தலிங்கம் செய்தியாளர்களிடம் கூறியதாகும்.

திரு. அமிர்தலிங்கம் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று கூறியிருக்கிருர்.

பிரதமரும் பிரச்சினையைத் தீர்ப்பதில் நல்லெண்ணம் கொண்டவராகத் தெரிகிருர்.

## முரசொலி மாறன் எம். ஏ.

தமிழரின் இலட்சியம் என்ன—என்று கேட்டதற்கு பேராசிரியர் கீழ்க்கண்டவாறு பதில் கூறியிருக்கிருர்; "முடிந்தால் இலங்கைக்குள்! அவசியம் நேர்ந்தால் இலங்கைக்கு வெளியே" ("Within Srilanka, if possible, Outside it, if necessary")

திரு. ஜெயவர்தனே தலையில் பண்டாரநாயகா ஆட்சி ஒரு பெரும் சுமையை ஏற்றி வைத்திருக்கிறது. முன்னேர்கள் ஏற்படுத்திய காயங்களையெல்லாம் அவர் ஆற்ற வேண்டியவராக இருக்கிருர்.

பேச்சுவார்த்தைக்குத் தயார்—என்று அறிவித்து தமிழர்கள் நேசக்கரம் நீட்டியிருக்கின்றனர்; இந்த வாய்ப்பினை நழுவ விடாமல் பேச்சுவார்த்தை துவங்கிட வேண்டும்என்றே நாமும் விரும்புகிறேம். உலகெங்கிலுமுள்ள தமிழர்களைப் போல!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் மடல்

# கட்டாய சிங்களம் தமிழினத்தின் பலிக்களம்!

**அன்பு நண்பா,**

கட்டியணைத்துக்கொண்டே கழுத்தை அறுப்பதிலும், இனிக்க இனிக்க பேசிக்கொண்டே மற்றவர்களை மயக்கத்தில் ஆழ்த்திவிட்டு தங்கள் காரியங்களை சுலபத்தில் முடித்துக் கொள்வதிலும். கெட்டிக்காரர்கள் ஐக்கிய தேசியக் கட்சியினர் என்பது நாடறிந்த சங்கதி; கடந்த காலத்தில் நாம் நிதர்சனமாகக் கண்ட உண்மை! இந்த நரித்தந்திரம் அவர்களுக்கே கைவந்த கலை; அதுவே அவர்களது இராசதந்திரமும் கூட!

கடந்த காலங்களில்—பெரிய சேனநாயகா காலத்திலிருந்து ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கங்களின் ஆசைவார்த்தைகளை நம்முடைய தலைவர்கள் நம்பி, அதிலே மயங்கிக் கிடந்தநேரங்களில்தான் தமிழின ஒழிப்புக்கு—தமிழினத்தை பூண்டோடு வேரறுப்பதற்கு திரைமறைவுத்திட்டங்கள் தீட்டப்பட்டன என்பதும், அவற்றின் பெரும்பகுதி நடைமுறைப்படுத்தப்பட்டன என்பதும் நாம் இச்சமயத்தில் நினைவு கூரவேண்டிய பாரிய உண்மைகளாகும்!

மயக்குமொழிகளையும் ஆசைவார்த்தைகளையும் ஏதாவது அற்பசலுகைகளையும் அள்ளி வீசிகொண்டே. அந்த மயக்கநிலையில் தமிழ் மக்களும் அவர்களின் தலைவர்களும் உறங்கியிருந்திட—தமிழினத்தின் குடியுரிமை, நிலவுரிமைகளை கொள்ளையடித்தது ஐக்கிய தேசியக் கட்சிதான் என்பதை நாம் மறந்து விடக்கூடாது!

தமிழ் மொழிக்கு சிங்களமொழியுடன் சம உரிமை என்ற மயக்க மருந்தை தமிழ் மக்களுக்கு கொடுத்துக் கொண்டேயிருந்தால் அந்த மயக்கத்தில் மூழ்கி, அவர்கள் தம்மை மறந்து சிங்களத்தை விழுந்து விழுந்து படிப்பார்கள்; அதற்கிடையில் தமிழ் பேசும் மக்களின் மரபுவழித்தாயகத்தில் சிங்களமக்களை திட்டமிட்டு குடியேற்றி தமிழ்நிலங்களை விழுங்கி ஏப்பம் விட்டுவிடலாம்; தமது மொழிக்கு சம உரிமை என்ற மயக்கநிலையிலிருக்கும் தமிழ் மக்கள் இந்த சிங்களக் குடியேற்றத்தைப் பற்றி அக்கறையோடு கவனிக்கப் போவதில்லை! அதற்குள் விஷயத்தை முடித்துவிடலாம்; தமிழ் மக்களின் தாயகம் பூரணமாக ஆக்கிரமிக்கப்பட்டு முடிகின்ற தறுவாயில், சிங்களமொழியை தமிழர்கள் தாமாகவே படித்து அதிலே பாண்டித்தியம் பெற்று விடுவார்கள்; அந்தச் சூழ்நிலையில் எந்தவித எதிர்ப்புமின்றி சுலபமாக எதுவித பரபரப்பும் சலசலப்புமின்றி நாடு முழுவதும் சிங்களத்தை மட்டும் அரசாங்க மொழியாக்கி விடலாம்; தமிழை நீக்கிவிடலாம்; என்கிற சதித்திட்டம் யூ. என். பியின் மூலவர் டி. எஸ். சேனநாயகா போட்டிருந்த திட்டமாகும்!

தமிழ் மக்களின் தனித்துவத்தையும், மரபு வழித்தாயகத்தையும் இறுதியாக மொழியையும் கபளீகரம் செய்வது; இதை தமிழர்கள் உணர்ந்து எதிர்த்துப்போராடாத முறையில் மிகத் தந்திரமாக அவர்களை அணைத்துக்கொண்டே கச்சிதமாக செய்து முடித்திடுவது தமிழினத்துக்கு நோவு தெரியாத முறையில் அதை அழித்தொழித்து நாடு முழுவதையும் சிங்களபௌத்த நாடாக்குவது என்பதே ஐ. தே. கட்சியின் ஆதிமுதல் திட்டமாகும்!

தமிழ் மக்களுக்கு 'நோவு' தெரியாமலே அவர்களை 'காவு' கொடுக்கும் யூ. என். பி. யின் இந் நீண்டகால சதித்திட்டம், 1956ம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் காலஞ் சென்ற திரு. பண்டாரநாயகா "சிங்களம்மட்டும்" என்ற முழக்கத்தை குறுக்குவழியில் அரசியல் ஆதிக்கத்தைப் பிடிப்பதற்காக 'அவசரப்பட்டு' முன் வைத்ததால் நிறைவேறமுடியாமற்போய்விட்டது; தமிழர்கள் விழித்தெழுந்தனர்; ஓரணி திரண்டனர்; பேராபத்தினை உணர்ந்தனர்; அன்று முதல் எதிர்ப்பு இயக்கங்களிலும, இன விடுதலைப்போராட்டத்திலும் ஈடுபடடு வருகின்றனர்!

நண்பா, இவற்றையெல்லாம் ஏன் இங்கு குறிப்பிடுகிறேன் என்ருல்— இன்றைக்கு நடப்பதும் ஐக்கியதேசியக் கட்சியின் ஆட்சி; இன்றைய ஆட்சியின் தலைவராக விளங்கும் ஜே. ஆர். ஜெயவர்த்தன அவர்களும், தமிழர்களை 'மயக்கம்' கொள்ளச் செய்கின்ற அளவுக்கு இனிப்பு வார்த்தைகளை அடிக்கடி வாயளவில் அள்ளி வீசிவருகிருர்; இந்த இனிப்புவார்த்தைகளில் நமது மக்கள் 'மயங்கி' மீண்டும் ஒரு முறைஏமாந்து விடக்கூடாது என்று எச்சரித்திடவே கடந்தகால நடவடிக்கைகளை எடுத்துச் சொன்னேன்!

சிங்களம் தெரியாதவர்கள் எவரும், சிங்களம் தெரியாத ஒரே காரணத்துக்காக இரண்டாந்தர பிரஜைகளாக நடத்தப்படுவதை தாம் அனுமதிக்கப் போவதில்லையென்று பிரதமர்— வருங்கால ஜனதிபதி —ஜே. ஆர். அவர்கள் தேசிய அரசுப்பேரவையில் அண்மையில் கூறியிருந்தார்! இப்படிப்பேசிவிட்டால் மட்டும் தமிழர்களின் உள்ளம் குளிர்ந்து விடாது!

நாட்டின் அரசியல் சட்டப்படி சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி; அரசாங்கமொழி; சிங்களம் மட்டும் என்ற சட்டம் வந்தபின்னர்தான் சிங்களம் தெரியாதவர்கள் இரண்டாந்தர குடிமக்களாக்கப்பட்டனர்; எனவே, 'சிங்களம் மட்டும்' சட்டத்தை முழுமையாக மாற்றியமைக்காமல்— அதை அப்படியே அரசியல் சட்டத்தில் வைத்துக் கொண்டு—சிங்களம் தெரியாதோர் இரண்டாந்தரப் பிரஜைகளாக்கப்படுவதை அனுமதிக்கப்போவதில்லையென்று 'பெரியநிலை'யில் நின்று வாயளவில் பேசி விடுவதால் தமிழ் சமுதாயத்துக்கு ஏற்பட்டிருக்கின்ற தேசிய அவமானத்தை துடைத்துவிட முடியாது! இன்றைய ஐ. தே. கட்சியும் சேர்ந்துதான் 1956ம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டத்தை கொண்டு வந்து தமிழ் மக்களை இரண்டாந்தர குடிகளாக்கியது; 1957ம் ஆண்டு பண்டா— செல்வா ஒப்பந்தம், சிங்களம் மட்டும் சட்டத்தை வலுவிழக்கச் செய்து, வடக்கு கிழக்கில் தமிழை ஆட்சிமொழியாக்கி விட்டதாகக் கூறி அதை எதிர்த்து 'கண்டியாத்திரை' போனுர் இன்றைய பிரதமர் ஜே. ஆர். இந்தச் சம்பவங்களை தமிழன் இன்னும் மறந்துவிடவில்லை; மறக்கப் போவதுமில்லை!

சென்ற 7-10-77ல் தேசிய அரசுப்பேரவையில் பேசியபோது பிரதமர் ஜே. ஆர். கூறிய மற்ருேர் கூற்றும் சிந்திக்க வேண்டியதொன்று—

''மொழிப்பிரச்சினை என்பது தீர்க்க முடியாத ஒரு பிரச்சினையல்ல; மல்வத்தை, அஸ்கிரிய பீடங்களைச் சேர்ந்த மகாநாயக்க தேரோக்களே நாட்டின் சகல குழந்தைகளுக்கும் தமிழையும், சிங்களத்தையும் கட்டாயமாக போதிக்கவேண்டும் என்று ஆலோசனை கூறியிருக்கிருர்கள் — பௌத்த மத பீடத்தின் குருமாரே இன்று இந்த முடிவுக்கு வந்துவிட்டனர், எனவே மொழிப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது இலகு; எனது அரசாங்கம் நிச்சயம் தீர்வு காணும்—என்று பேசியிருக்கிருர் பிரதமர் ஜே. ஆர்.

இதிலிருந்து நமக்கு தெரிவது என்ன?

தமிழ் தேசிய இனத்தின் பிரச்சினையை— தமிழ் இனத்தின் சுதந்திர அபிலாஷையை— வெறும் 'மொழிப் பிரச்சினை' என்ற அளவிலேயே பிரதமர் இன்னும் கணித்துக் கொண்டிருக்கிருர்! தமிழினத்தின் பிரச்சினை அவ்வளவு அற்பமானதாகவே அவருக்குப்படுகிறது— அல்லது அப்படி வெளியே குறைத்துக் காட்டிக் கொள்ள விரும்புகிருர்!

ஆனுல் இலங்கை இன்று எதிர்நோக்கி நிற்பது சாதாரண மொழிப்பிரச்சினையல்ல; இரண்டு தேசிய இனங்களுக்கு இடையிலான பிரச்சினை! இரண்டு நாடுகளுக்கு இடையிலான பிரச்சினை! வெறும் மொழியுரிமைக்காக தமிழன் போராடிய காலம் என்ருே மலையேறிவிட்டது; இன்று தமிழினம் போராடுவது தனது வாழ்வுக்காக - தனது தாயகத்தின் சுதந்திரத்துக்காக; தனது தாயக மண்ணை காத்துக் கொள்வதற்காக; அத் தாயகத்தில் தன்னைத்தானே ஆளுவதற்காக: இந்த தேசிய இனப் பிரச்சினையை வெறும் 'அற்பமான' ''மொழிப் பிரச்சினை'' என்கிற அளவில் பிரதமர் கருதுவாரானுல்— அவரால் இப்பிரச்சினைக்கு தீர்வு காண்பது முடியாத காரியமாகிவிடும்.

அடுத்து— தமிழ் பிள்ளைகள் சிங்களத்தையும், சிங்களப்பிள்ளைகள் தமிழையும் கட்டாயமாகப் படிக்கவேண்டுமென்ற திட்டம்— மேலோட்டமாகப் பார்க்கின்றபோது ஓர் உன்னதமான திட்டமாக காணப்பட்டபோதிலும் —உண்மையில் தமிழினத்தை அழிப்பதற்கு போடப்படுகின்ற ஒரு சதித்திட்டம் என்பதிற் சந்தேகம் இல்லை!

நாட்டின் ஆட்சிமொழி சிங்களம் மட்டும்; நாட்டின் ஆட்சி அதிகாரம் சிங்களவர்கள் கைகளில்; சிங்கள இனம் ஆளுகின்ற இனம்; தமிழ் இனம் ஆளப்படுகின்ற இனம்; இந்த இழிநிலை நீடிக்கும்போது —தமிழினம் தன்னுடைய தாயகத்தில் கூட தன்னைத்தானே ஆளுகின்ற சுதந்திரநிலையில் இல்லாது இருக்கும்போது — 'எசமான்' மொழியாக இருக்கும் சிங்களத்தை தமிழ்ப் பிள்ளைகள் படித்திடுவது நமது அடிமை நிலையை மேலும் இறுக்குவதாகவே முடியும்!!

சிங்கள மக்கள் பூரண சுதந்திரத்தை அனுபவிக்கிருர்கள்; அவர்களின் மொழிக்கு, கலைகலாசாரத்துக்கு மதத்துக்கு அரசாங்க அந்தஸ்தும், மரியாதையும் உதவியும் பூரண பாதுகாப்பும் கிடைக்கிறது; அந்த நிலையில் அவர்கள் தமிழை மட்டுமல்ல— உலகில் வேறு எந்த மொழியையும் படிக்கலாம்— அதனுல் அவர்கள் இழப்பதற்கு ஒன்றுமில்லை!

ஆனுல் தமிழினமோ மொழியிழந்து— மொழியுரிமை இழந்து— அரசிழந்து, அரசுரிமை யிழந்து - தனது மொழிக்கும், தாயகத்துக்கும், கலை, கலாசாரம், மதங்களுக்கும் பாதுகாப்பு ஏதுமின்றி— தனித்துவத்தை பேண வழியின்றி— திக்குமுக்காடுகிறது; இந்நிலையில் நமக்கோர் பாதுகாப்பு தேடாமல்— நம்மீது ஆதிக்கம் செலுத்த நுழைகின்ற மொழியை நமதுமக்கள் கட்டாயமொழியாகப் படித்திடுவது தற்கொலைக் கொப்பான செயலாகும்!

தமிழ் மக்களின் தொண்டைக்குள் எது விதத்திலும் சிங்களத்தை திணித்து அவர்களை பலவீனப்படுத்தி விடவேண்டுமென்ற நோக்குடன்தான் —இந்த மும்மொழித்திட்டத்தை இன்றைக்கு சில பௌத்த பிக்குகள் ஆதரித்து நிற்கின்றனர்; சிங்களவர் தமிழ் படித்திடுவதால், சிங்கள இனத்துக்கும் மொழிக்கும் தீங்கேதும் நேராது; தமிழர் சிங்களம்படித்திடுவதாலோ— தமிழ் மக்களை பலவீனப்படுத்திவிடலாம் என்ற தீயநோக்குடன்தான் 'தமிழர் சிங்களமும், சிங்களவர் தமிழும் கட்டாயமாக படித்திடவேண்டும் என்ற திட்டம் இப்போது முன்வைக்கப்பட்டிருக்கிறது.

இன்றைய அடிமைநிலையில் ஆதிக்கமொழியான சிங்களத்தை தமிழர் கட்டாயமொழியாகப் படித்திடுவது— செந்தமிழர் மரபை சிதைத்திடவே வழிவகுத்திடும்; நமது இன விடுதலைப் போராட்டத்தைப் பலவீனப்படுத்திடும்; நமது மொழியை சிதைத்திடும்: நம்முடைய இனத்தின் அழிவுக்கே வழிவகுத்திடும்; நம்முடைய நாடு நமதான பின்னர்— தமிழ் ஈழம் பிறந்தபின்னர்— அயல் நாட்டு மொழி என்ற அளவில் சிங்களத்தை படித்திட நாம் தயாராக இருக்கிருேம்— ஆனுல் அடிமைகளாக இருந்துகொண்டு ஆதிக்க மொழியை கட்டாய மொழியாக ஏற்க மாட்டோம் என்று தமிழர் உறுதிகொள்ளவேண்டும்!

தமிழ்மக்களுக்கு மூதறிஞர் தந்தை செல்வா தந்து சென்ற திட்டம் இருமொழித் திட்டமே! தாய்மொழியான தமிழையும். ஆங்கிலத்தையும் தமிழர் படித்திட வேண்டும்; சிங்களம் தேவையில்லை என்பதே செல்வா அவர்கள் எடுத்துக் கூறிச் சென்ற அறிவுரையாகும்; 1965ம் ஆண்டு யூ,என்,பியுடன் தமிழரசுக்கட்சி ஒத்துழைத்த சமயத்தில் — மும்மொழித்திட்டம் ஒன்று கொண்டு வரப்பட்ட சமயத்தில் அதை மும்முரமாக எதிர்த்து—சிங்களம் படித்திடுவது செந்தமிழினத்துக்கு பேராபத்து என்பதை திட்டவட்டமாக எடுத்துக் கூறியவர் மூதறிஞர் தந்தை செல்வா! அந்தத் தீர்க்கதரிசி -தெய்வ மனிதர் கூறிச்சென்ற அறிவுரைகளைப்பின்பற்றி யூ. என். பி,யின் போதையில் மயங்கிடாமல் 'தமிழ் ஈழம்' என்ற இலட்சிய புரியை நோக்கி நமது பயணத்தை கொண்டுநடத்திடுவோம்!

**உங்கள் அன்பு தோழன்**

**கோவை-மகேசன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## இனியொரு விதி செய்வோம்

ஈழத்தமிழினத்தின் தேசிய அபிலாஷைகளையும் உள்ளக்குமுறல்களையும், சுதந்திர வேட்கையையும் பிரதிபலிக்கின்ற ஒரே இயக்கமாக இன்று விளங்கிவருவது தமிழர் விடுதலைக் கூட்டணி.

தமிழ் மக்களுக்கு புதிய நம்பிக்கையையும் புதிய வேகத்தையும் புத்தொளியையும் ஏற்படுத்தி, அவர்களை ஒற்றுமைப்படுத்தியுள்ள ஒரே அணி தமிழர் விடுதலைக் கூட்டணி.

ஈழத்தமிழினத்தின் தேசிய விடுதலை இயக்கம் என்று வெளிநாட்டினரால்—உலகின் முன்னணி ஏடுகளால்—ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும் ஒரே இயக்கம் தமிழர் விடுதலைக் கூட்டணி.

முப்பதாண்டுகளாக ஈழத்தமிழினத்தின் ஈடிணையற்ற தலைவராகவும் வழிகாட்டியாகவும் விளங்கிய மூதறிஞர் தந்தை செல்வா, உருவாக்கி, கட்டிவளர்த்து தந்து விட்டுச் சென்றுள்ள விடுதலை மாளிகை தமிழர் விடுதலைக் கூட்டணி.

இந்த அணி மீதும் அதன் ஒப்பரிய 'தமிழ் ஈழம்' என்ற புனித இலட்சியத்தின் மீதும் பூரண நம்பிக்கையும் விசுவாசமும் வைத்துத்தான் கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணிக்கு இமாலய வெற்றி ஈட்டித் தந்தனர்;

இத்தகைய மாபெரும் இயக்கமான தமிழர்விடுதலைக்கூட்டணியின் ஒவ்வொரு செயலையும், நடவடிக்கைகளையும், அது இயங்கும் முறையையும், இந்த நாட்டு மக்கள் மட்டுமல்ல— வெளிநாடுகளின் அரசியல் ஆய்வாளர்களும் இப்போது கூர்ந்து கவனித்துவருகிறார்கள்.

எனவே, கூட்டணியினரின் பேச்சிலும், எழுத்திலும், செயலிலும் அடிப்படை இலட்சியத்திலும் முரண்பாடுகள் கிஞ்சிற்றும் ஏற்படாமல் சர்வஜாக்கிரதையுடன் இயக்கம முன்னெடுத்து செல்லப்படவேண்டும்! சொல்லும், செயலும் ஒன்ருக இருந்திட வேண்டும்.

கூட்டணி ஓர் இயக்கமாக உருவெடுப்பதற்கு முன்னர்—அதன் இலட்சியம் கூட்டணியில் இணைந்த கட்சிகளின்ஒத்த சிந்தனையின் அடிப்படையில் வடிவம் பெறுவதற்கு முன்னர்— இறுக்கமான கட்டுக் கோப்புள்ள ஓர் அமைப்பாக அது செயல்படுவதில் சங்கடங்கள் இருந்ததை நாம் அறிவோம்!

ஆனல்—1976ம் ஆண்டு வட்டுக்கோட்டை மாநாட்டின்போது கூட்டணியின் அடிப்படை இலட்சியம், நோக்கம் யாவும் வரையறை செய்யப்பட்டுவிட்டது; அரசியல் தத்துவம் வகுக்கப்பட்டுவிட்டது!

1977ம் ஆண்டு பொதுத்தேர்தலின்போது, தமிழர் விடுதலைக்கூட்டணி ஒரே அரசியல் இயக்கமாக பதிவு செய்யப்பட்டு, ஒரே அமைப்பாக மாறிவிட்டது. எனவே கூட்டணியென்ற அமைப்பு, அமைப்பாக இருப்பதற்கு அது கட்டுப்பாடு என்ற கவசத்தை இனியாவது தரித்துக் கொள்ளவேண்டியது அவசியம்.

மற்றவர்கள் நம்மைப் பார்த்துச் சிரிக்கவும், கேலி பேசவும், 'இவ்வளவுதான இவர்கள்?' என்றுபரிகாசிக்கவும் கூடிய நிலைகளுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி ஆளாகாது தன்னை ஒரு கட்டுப்பாடுள்ள அமைப்பாக அது ஆக்கிக் கொள்ள வேண்டும்!

எல்லா மட்டங்களிலும் இந்தக்கட்டுப்பாடு உறுதியாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்!

ஏதாவது ஒரு கட்டத்தில்—கட்டுப்பாடு குலையுமானல்—அல்லது குலைய அனுமதித்தால்—அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டேயிருக்கும்; பின்னர் அமைப்பே சிதறிவிடும்! இலட்சியமும் சின்னபின்னமாகும்!

இதுவரை நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்! இனி மேலாவது கூட்டணிக்குள் இறுக்கமான கட்டுப்பாட்டையும், கட்டுக்கோப்பையும் ஏற்படுத்திட கூட்டணியின் அதிகாரசபை நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாக!

எங்கோ ஓர் இடத்திலிருந்து கட்டுப்பாடு கடைப்பிடிக்கப்பட வேண்டும்! கட்டுப்பாட்டை மீறுவோர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்! இல்லாவிடின், அமைப்பே, இயக்கமே கேலிக் கூத்தாகி விடும்!

ஆம்—தமிழர் விடுதலைக் கூட்டணி இனியொரு விதி செய்யட்டும்—அதை எந்தநாளும் காக்கட்டும்!

# "இலங்கைத் தமிழர் தங்கள் சொந்தத் தாயகத்திலேயே அகதிகளாக்கப்பட்டனர்"

## ஆகஸ்ட் கலவரம்பற்றி 'ஜமெய்க்கா' ஏடு

"Victims of envy, Sri Lanka's Tamils are... REFUGEES IN THEIR OWN HOMELAND" (தங்கள் சொந்தத்தாயகத்திலேயே இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக்கப் பட்டுள்ளனர் என்ற தலைப்பில் ஆகஸ்ட் இனக்கலவரம் பற்றி ஜமெய்க்காவிலிருந்து வெளிவரும் "DAILY GLEANER" என்ற, ஆங்கிலப் பத்திரிகை பின்வருமாறு எழுதியுள்ளது.

"ஆகஸ்ட் கடைசி இரு வாரங்களிலும் இலங்கையில் நடைபெற்ற இனவாத வன்முறைச்சம்பவங்கள், பெரும் அழிவையும் துன்பத்தையும் அங்கு ஏற்படுத்தியுள்ளது. அதிகார பூர்வமான தகவலின்படி கொல்லப்பட்டவர்கள் தொகை 112. 35 000 தமிழர்கள் அகதிகளாகியுள்ளனர்.

"இவர்களில் அரைவாசிப் பேர், இலங்கையின் வடபகுதியை பூர்வீகமாகக் கொண்ட இலங்கைத் தமிழர்களாகும், ஆனல் இவர்களில் பெரும்பாலோர் சிங்களப் பெரும்பான்மையினர் வாழும் தெற்கில் பல தலைமுறைகளாக தொழில் செய்து, வாழ்ந்து வந்தவர்களாவர், வடக்குடன் உள்ள தொடர்புகளையும், துண்டித்துக் கொண்டு, வேறு இனங்களுடன் கலப்புத் திருமணம் செய்து, கிறித்தவ மதத்தையும் தழுவி, மேல் நாட்டு நாகரிகத்திலும் மூழ்கி, அரசாங்கத்திலும், தனியார் துறைகளிலும் பெரும்பதவி வகித்தவர்களும் இவர்களுக்குள் உண்டு.

"ஆயிரக்கணக்கான தமிழர்களின் வீடுகள் கொழுத்தப்பட்டன; அவர்களிடமிருந்த பொருட்கள் சேமிப்புக்கள் கொள்ளையடிக்கப்பட்டன; அவர்களின் குடும்பங்கள் கொலை செய்யப்பட்டன. பீதியும். அச்சமும், காரணமாக அவர்கள் அகதி முகாம்களுக்கு ஓடிச் சென்றனர் தெற்கில் உள்ள அகதி முகாம்கள் நிரம்பி வழிந்த தன்காரணமாக இந்தத் தமிழர்களை அரசாங்கம் கப்பல் மூலம் வடக்கே அனுப்பி வைத்தது. இப்போது அவர்கள் தங்கள் சொந்த மரபுவழித் தாயகத்திலேயே அகதிகளாகியுள்ளனர். பலருக்கு வடக்கில் வீடுகளோ, வருமானமோ—அடி அத்திவாரமோ கிடையாது. அவர்களில் பலர் படித்தவர்கள்; பயிற்சி பெற்றவர்கள்; தொழில் நுட்பம் தெரிந்தவர்கள்; ஆனலும் அவர்களது உச்சக்கட்டத்திறமையே அவர்கள் மீது இனரீதியான வெறுப்பு சிங்களவருக்கு ஏற்படக் காரணமாயமைந்தது.

"வடக்கு நோக்கி இலங்கைத் தமிழர்கள் கப்பல் மூலம் அனுப்பப்பட்டபின்னர், தெற்கில் பல ஆயிரக்கணக்கான இந்தியத்தமிழர்கள் அகதிமுகாம்களில் இருக்கின்றனர். இந்த மக்கள் கடந்த நூற்ருண்டில் பிரிட்டிஷ் காரர்களால் இலங்கையின் மையப்பொருளாதாரமாக விளங்கும் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்தியாவிலிருந்து கூலிகளாக கொண்டுவரப்பட்டவர்கள்.

"1974ம் ஆண்டு பிரிட்டிஷாருக்கு சொந்தமான தோட்டங்கள் தேசிய மயமாக்கப்பட்டபோது—பிரஜாவுரிமை வாக்குரிமையின்றி, அரை அடிமைநிலையில் தேயிலைத்தோட்டங்களில் வேலைசெய்து வந்த இந்தியத்தமிழர்கள், சிங்களவர்களுக்கு வேலை கொடுக்கும் நோக்கத்துடன், தோட்டங்களிலிருந்து தூரத்தப்பட்டனர்.

—8-ம் பக்கம் பார்க்க

## வீமன்காமத்தில் காந்தி ஜயந்தி விழா

16-10-77 ஞாயிறு மாலை 6 30மணிக்கு வீமன்காமம் காந்திஜி சனசமுக நிலையத்தில்காந்தி ஜயந்தி விழா திரு. நா. இராமலிங்கம் தலைமையில் கொண்டாடப்படுகிறது. விழாவில் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் பா. உ. திருமதி அமிர்தலிங்கம், சுதந்திரன் ஆசிரியர் கோவை மகேசன், திருமதி வ. இராமலிங்கம், பொன் கணேசமூர்த்தி, நா. கருணனந்த சிவம், ஆகியோர் உரையாற்றுவார்கள் "பாரத சுதந்திரத்தின் முக்கியபங்கு மகாத்மாகாந்தியடிகளையே சாடும்" என்ற தலைப்பில் பட்டிமன்றம் இடம்பெறும்.




அன்புள்ள ஆசிரியர் அவர்கட்கு,

உங்கள் 9-10-77ம் திகதிய அரசியல் மடல் கண்டேன், பிரமாதம் இன்றைய நிலையில் இது போன்ற அரசியல் மடலைப் படிக்கும்போது உள்ளமெலாம் உவகை பொங்குகின்றது. அண்ணு, என்ன காற்றடித்தாலும் கொண்ட இலட்சியத்திற்காகவே இம்மியும் அசையாது தழைத்து நிற்கும் உங்களை பாராட்டுகிறேன்.

நீங்கள் கூறுவது போல் மாவட்ட மந்திரி என்ற மாயமானைக் காட்டி தமிழினத்தின் ஒற்றுமையைச் சிதைக்கப் போகிருர்கள், தமிழீழத்தாயின் அடிமை விலங்கை அறுப்பது எப்படி என்ற சிந்தனையை விட்டு, [illegible] மிருந்து ஆதரவைப் பெற்ற கூட்டணியினர் சிலர் மா. ம. பற்றி பேசி காலத்தைக் கடத்துவது வருந்தத்தக்கதே? எனது இலட்சியம் இதுதான் என்று நீங்கள் பகிரங்கமாக விடுத்தது போல் எமது சில தே. பே. உறுப்பினர்களும் இவை பற்றி பகிரங்கமாக கூருமல் மா. ம. பதவியை ஏற்ருல் என்ன என்ற எண்ணத்தில் சஞ்சரித்து சஞ்சலப்படுவதையிட்டு கவலைகொள்ள வேண்டியிருக்கிறது.

இலட்சியத்தில் ஒருவனுய், எழுத்துலகில் ஒருவனுய், அரசியல் மடலிலும் ஒருவனுய் திகழ்பவன் தான் கோவை அண்ணு என்பதை எண்ணி பெருமையடைகிறேன்.

—திருமலை அமுதா—

அன்புள்ள ஆசிரியருக்கு,

எமது சுதந்திரனில் நண்பனுக்கு நீங்கள் எழுதிய 'அரசியல் மடல்' கடிதத்தைப் படித்தேன். மாவட்ட மந்திரி பதவிபற்றி அழுத்தமாக எழுதி உள்ளீர்கள், இதனை மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

உங்கள் அரசியல் மடலையாவது பார்த்துவிட்டு இனிமேலாவது மாவட்ட மந்திரி மயக்கம் தெளியட்டும்;

—இ. அரசரத்தினம்,
குருக்கள்மடம்.

9-10-77 அன்று வெளியான சுதந்திரனில் முகப்பில் வெளியிடப்பட்டுள்ள கேலி சித்திரம் மிகவும் நன்ருகவுள்ளது. அர்த்தமற்றுகிடந்தவரிகளுக்குயதார்த்தபூர்வமான எதிரிடையான கேலி சித்திரமூலம் அர்த்தமூட்டியிருக்கிறீர்கள். இப்படியான பாடல்களை இயற்றும் கவிஞர்கள் இனிமேலாவது விளக்கொளியில் வீற்றிருந்து இயற்றட்டும் தமது கவிதைகளை.

—பொன் பூபாலசிங்கம்
கொழும்பு வளாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனும் மன்னிப்பானே?

எந்தமிழ் இனத்தைக் கொன்றூர்
இரத்தத்தில் குளிக்கச் சொல்லி
தந்தையை, தாயை, பெற்ற
தனயனை வெட்டிப் போட்டார்!
சிந்தையில் இரக்கமில்லாச்
சிங்கள வெறியர் செய்த
இந்த மாபாதகத்தை
இறைவனும் மன்னிப்பானே?

தனக்கொரு நாடு இல்லாத்
தமிழனின் நிலையைப்பாரீர்!
கனிக்குலை சாய்ந்தாற் போல
கணக்கில்லா உயிர்களம்மா!
இனிக்கதை ஏதும் வேண்டாம்
இலங்கையைப் பிளந்தே
தீர்வோம்!
மனுக்குலம் அறியச் சொல்வோம்
மறவர் நாம் தோற்றதில்லை!

எழுகவே தமிழர் சேனை!
எந்தமிழ் இனத்தைத் தின்னும்
கழுகுகள் தலையைக் கொய்து
கதையினை முடித்துப் போட!
பழுதில்லை கையில் வாளைப்
பற்றியே பகையை வெல்லல்!
அழுதது போதும்! போதும்!
அனுதைகள் போல நாமே!

கவிஞர் வாகரைவாணன்.

# சண்டித்தனம் செய்த சிங்களவர்களை பொலிசார் கைது செய்யவில்லை! காடைத்தனத்தை தடுக்கச் சென்ற தமிழர்களுக்கு அடி உதை!

## வவுனியாவில் பொலிசாரின் விசித்திர விசாரணை!

சென்ற 8-10-77ம் திகதி சனிக்கிழமை வவுனியாவில் உள்ள தேன்சுரபி என்ற பிரபல்யமான தேனீர்க் கடையில் சில சிங்களக் காடையர்கள் மூக்குமுட்டச் சாப்பிட்டு விட்டு வெளியேறினுர்கள். வெளியே வரும்பொழுது கடைக் காசாளர் பணம் கேட்டார்; அப்பொழுது அக்காடையர்கள் பணம் கொடுக்க மறுத்ததுடன் காசாளரையும் தாக்கினுர்கள். அப்பொழுது கடையில் வேலை பார்க்கும் சக ஊழியர்கள் அப்பிரச்சனையைத் தடுக்க முற்பட்டபோது, அவர்களுக்கும் அங்குள்ள போத்தல்களால் எடுத்து எறிந்து வேறு சில பொருட்களையும் சேதப்படுத்திவிட்டு ஓடினுர்கள். அதைக்கண்ட சில தமிழ் இளைஞர்கள் காடையர்களைப் பிடிப்பதற்காக துரத்திக்கொண்டு ஓடினுர்கள். அதனுல் சில காடையர்களுக்கு காயங்கள் ஏற்பட்டதே தவிர அவர்களைப் பிடிக்க முடியவில்லை.

சண்டை நடக்கும் போது போய் அதை தடைசெய்யாது தெரியாததுபோல் இருந்துவிட்டு சண்டை முடிந்த பின்னரே கண் துடைப்பு. விசாரணை செய்யும் பழக்கம் கொண்ட பொலீசார் வழமை போலவே அன்றும் அங்கு சென்று விசாரணை செய்தார்கள். அதாவது கடையில் கலாட்டா செய்த சிங்களக் காடையர்களைக் கண்டுபிடிக்க அவர்கள் முயற்சி எடுக்கவில்லை. மாருக அவர்களை பிடிப்பதற்காகத் துரத்திச் சென்ற தமிழ் வாலிபர்களைப் பிடித்துச் சென்று அவர்களுக்கு அடியும் உதையும் கொடுத்தார்கள் இன்னும் சிலரைத் தேடிவருகிருர்கள். ஆனுல் கடையில் கலாட்டா உண்டாக்கிய சிங்களக் காடையர்களைத் தேடும் முயற்சியில் ஈடுபடுவதாகத் தெரியவில்லை.

இவ்வாறு பொலீசார் செய்து வரும் விசாரணையும், போக்கும் வவுனியா மக்களுக்கு ஒரு விநோதமாக விருக்கிறது. பொலீசார் நாட்டில் நடக்கும் வன்செயல்களைக்கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கைகள் எடுத்து வருகிருர்கள் என்று அரசாங்கம் சொல்வது உண்மையா? பொய்யா? என்று மக்கள் நம்பமுடியாத நிலையில் இருக்கிருர்கள்.

இச்சம்பவம் நடைபெற்ற கடை, முன்பும் சிங்களக் காடையர்களால்உடைத்துக் கொள்ளையடிக்கப் பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது

# பிறந்த தின வாழ்த்து!



## செல்வன் கருணனந்தராஜா தயாபரன்

புத்தளம் தமிழ் இளைஞர் பேரவை செயலாளர் கருணனந்தராஜா தம்பதிகளின் சிரேஸ்ட புதல்வன் தயாபரன் இன்று (16-10-77) தனது மூன்ருவது பிறந்த தினத்தைக் கொண்டாடுகின்ருர். இவரை சகல வளமும் பெற்று தமிழ் ஈழ விடுதலைக்குப் போராடும் தனயனுக திகழ்வதற்கு இறைவனின் ஆசீர்வாதம் கிடைக்க வேண்டுமென அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், சிங்கப்பூர் பாலன்மாமா, லீலா அன்ரி மற்றும் உறவினர்களும், தமிழ் ஈழ முதல்வர்களும். வாழ்த்துகின்றனர்.

## தனிநாட்டுக் —

—7-ம் பக்கத் தொடர்

"நடந்த சில சம்பவங்களை நான் வெளியிட விரும்புகிறேன். பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் கடந்த வருடம் மே 14ம் திகதி தமிழர் விடுதலை முன்னணி யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த தனது ஆண்டு மாநாட்டில் தமிழ் ஈழம் நிறுவுவதே தனது கொள்கையென ஏற்றுக்கொண்டது. இதன்மீது அரசாங்கம் எமக்கு எதிராக நடவடிக்கை எடுத்தது. என்னுடன் இச்சபைஉறுப்பினர்கள் வேறு மூன்று பேர்களும் கடந்த ஆண்டு மூன்றுநீதிபதிகள் முன்னிலையில் ட்றயல்-அற்-பார் விசாரணைஒன்றுக்குட் படுத்தப்பட்டார்கள். நாடனைத்துக்கும் இது தெரிந்த ஒன்று. இச்சபையிலுள்ள ஹல்வ்ஸ்டோப் நண்பர்கள் (சட்டத்தரணிகள்) கூட இதை அறிந்திருப்பார்களென நம்புகிறேன். தமிழ் ஈழம் நிறுவக்கோரும் தீர்மானத்தை உள்ளடக்கிய துண்டுப்பிரசுரத்தை வினியோகித்ததே எமக்கெதிரான குற்றச்சாட்டு.

அம்மட்டல்ல ட்றயல்-அற்-பார் முன்னிலையில் காலஞ்சென்ற திரு. திருச்செல்வமும் திரு. செல்வநாயகமும் எமக்கு அளித்திருக்கக்கூடிய நிதானமான ஆலோசனையையும் வழிகாட்டலையும் பற்றி கௌரவ பெண் அமைச்சர் குறிப்பிட்டிருந்தார். நீதிமன்றத்தில் தமிழ்ஈழம் நிறுவுவதற்கான வழக்கை நிறைவாக வாதிட்டார் திரு. திருச்செல்வம்.

உறுப்பினர் ஒருவர்:- பொன்னம்பலம்?

திரு. அ. அ:- அந்த வழக்குரைப்பில் திரு. பொன்னம்பலமும் சேர்ந்திருந்தார். ஆனுல் அவசர நிலையின் சட்டவலு பற்றியும் ட்றயல்-அற்.பார் நீதிமன்றம் கூடவும்வழக்கைக் கேட்கவும் முடியுமா என்பது பற்றியும் தொடர்பான இன்ஞெரு அம்சத்தைப்பற்றி அவர் வாதிட்டார். அவசர நிலை முறையாகப் பிரகடனப்படுத்தப்படவில்லை என்றும், எனவே சட்ட வலுவற்றதென்றும் தாம் ஒரு நீதிமன்றமாகக் கூடுவதற்குஅதிகாரமில்லை என்றும் அந்த நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அரசாங்கம் இந்தத் தீர்ப்புக்கு எதிராக உயர்நீதிமன்றத்துக்கு மேல் விண்ணப்பஞ்செய்தது. உயர்நீதிமன்றம் மேல் விண்ணப்பத்தை ஏற்றுத் தீர்ப்பளித்தது, ஆனுல் சட்டமா அதிபர் உயர் நீதி மன்றம் தனது தீர்ப்பைப் பகிரங்கப் படுத்த முன்னரே எம்மீதான வழக்கை வாபஸ் பெற்ருர்.

தமிழ் ஈழம், இந்நாட்டுத் தமிழ்த் தேசிய இனத்தின் உரிமைகள், ஆகிய பிரச்சினைகள் இந்நாட்டிற் பல மேடைகளில் கடந்த இரண்டரை ஆண்டுகளாக விவாதிக்கப்பட்டிருக்கின்றன. அப்பொழுது வீடுகள் சூறையாடப்படுவதும் மக்கள் கொலை செய்யப்படுவதுமான பிரச்சனைகள் இருக்கவில்லை. உங்களுக்கு ஏமாளி ஒன்று தேவைப்பட்டால் வேறெங்கேயாவது ஒன்றைத் தேடிப்பிடித்துக் கொள்ளுங்கள் வேறெவரின் பாவங்களுக்கும் எங்களை ஏமாளிகள் ஆக்கவேண்டாம். எம்மக்கள் மீது ஏற்படுத்தப்பட்ட காயங்கள் மீது மேலும் வேல் பாய்ச்ச முயலாதீர்கள்.

பாராளுமன்றத்துக்கு வெளியே தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் காயங்கள் மீது மேலும் வேல் பாய்ச்சிப் பேசினுர் கௌரவ கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சர் இந்த அமைச்சர் பிரச்சினைகளை அலசிப் பார்ப்பது மிகவும் விஞ்ஞான ரீதியானதாக இருக்கும் என்று நம்புகிறேன். எந்தப் பேச்சொன்றையாவது மக்களைக் கிளறும் தன்மையது என்று கூறக் கூடியதாயிருந்தால் அது இந்த அமைச்சர் பேசியவகையான பேச்சு ஒன்று ஆகவே இருக்க முடியும்.

வரதர் வெளியீடு பெருமையுடன் அளிக்கும்
"நீலவண்ணன்"
எழுதிய
24 மணி நேரம்
இனக்கலவரத்தின் முதல் நாள் யாழ்நகரில் நடந்த வன்செயல்களையும், தொடர்ந்து இலங்கை முழுவதும் நடைபெற்ற பல கொடுமைகளையும் சரியாக அலசி ஆராயும் நூல்.
நூல் வெளியீட்டு விழா
17-10-77 திங்கள் மாலை 6 மணிக்கு
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
தமிழ் மக்களின் மாபெரும் தலைவர்
திரு. அ. அமிர்தலிங்கம் தலைமைவகிக்க
அரசியல் அறம்காத்த
தோழர். வி. பொன்னம்பலம் வெளியீட்டுரை நிகழ்த்த
தலைவர்கள்:
திரு. கதிரவேற்பிள்ளை பா. உ.,
திரு. வெ. யோகேஸ்வரன் பா. உ.
சொல்லின் செல்வி.திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம்
ஆகியோர் சிறப்புரை வழங்குவர்
தமிழ் மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறேம்!
180பக்கத்துடன் 8பக்கம் ஆர்ட்பேப்பர் போட்டோக்கள்
விலை ரூபா. 6-50 (தபால் செலவு சதம் 60)
விற்பனையாளர்களுக்கு தகுந்த கழிவுண்டு
தொடர்பு கொள்க:
ஆனந்தா புத்தகசாலை
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். தொலைபேசி: 348

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “தமிழீழ அரசியலமைப்பை உருவாக்குமாறு கூட்டணியை பிரதமர் அழைக்கவேண்டும்!”

## கண்டியிலிருந்து ஒரு சிங்கள அன்பர் எழுதிய கடிதம்!

“பொருளாதார ரீதியில் சிங்களமக்கள் எவ்விதத்திலும் பாதிக்கப்படமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதமளிக்கப்படுமாயின், அவர்கள் தமிழ்ஈழம் அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப் போவதில்லை; எப்படி இருந்தாலும் தமிழர்களை யார் ஆளுவது என்பது அவர்களே தீர்மானிக்கவேண்டிய விஷயமாகும்!”

இவ்வாறு கண்டியிலிருந்து பி. எச். ஸி. மெண்டிஸ் என்னும் சிங்கள அன்பர் “டெயிலி நியூஸ்” பத்திரிகையில் (29-8-77) எழுதியுள்ள கடிதம் ஒன்றில் தெரிவித்துள்ளார். அக் கடிதம் வருமாறு:-

“பலாத்காரம் பலாத்காரத்தையே உருவாக்குமென்பதையும், பலாத்காரத்தினால் யாருக்கும் எதுவித நன்மையும் கிடையாது என்பதையும் அனைவரும் உணர்வது நல்லது. அயர்லாந்தில் கிறித்தவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள தீராத சண்டைபோல, இது நிரந்தர எரிமலையாகி விடலாம். எனவே பிரச்சினைகளை பாரபட்சமின்றி ஆராய்ந்து தீர்வு காணவேண்டியது உண்மையான தலைமையின் கடமையாகும். இன்றைய பிரச்சினைகளுக்கு மூலகாரணம் பொருளாதாரமே. மனிதர்கள் ஆத்மீக தன்மையை இழந்து மிருகநிலைக்கு இறங்கியது கவலையை தருகிறது.

எனவே நீதி நியாயத்தின் அடிப்படையில் நின்று இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணுமாறு பிரதமரை நான் கேட்டுக் கொள்கிறேன். தமிழர் விடுதலைக் கூட்டணியினரை அழைத்து அவர்கள் கோரும் புதிய நாட்டின் எல்லைக்கோடுகளை காட்டும் அரசமைப்புத் திட்டத்தை உருவாக்குமாறு பிரதமர் கோரவேண்டும்; அதனைப் பரிசீலனை செய்ய வேண்டும்.

அத்துடன், தமிழ்ஈழத்தில் வரும் சிறுபான்மை பிரச்சினைக்கு அவர்களது தீர்வு என்ன என்பதையும் கேட்க வேண்டும். எல்லா ஈழத் தமிழர்களையும் தமிழ்ஈழத்துக்கு மீள அழைத்துக் கொள்ளத் தயாரா என்பதையும் கேட்கவேண்டும்.

பொருளாதாரரீதியில் சிங்களவர்களுக்கு எவ்வித இழப்பு இல்லாமலும், சிங்கள தேசத்தின் பாதுகாப்புக்கு உத்தரவாதமும் அளிக்கப்படுமாயின்--ஈழம்அமைக்கப்படுவதற்கு சிங்கள மக்கள் எதுவித எதிர்ப்பும் தெரிவிக்கமாட்டார்கள் என்பதே எனது கருத்தாகும். பிரிட்டிஷார் ஆட்சிக்காலத்தில் யாழ்ப்பாணத் தமிழர்கள் உத்தியோகம், தொழிற்துறையை தமது ஆதிக்கத்துக்குள் வைத்திருந்தார்கள், இன்று கூட, சட்டத்துறை மருத்துவத் துறையிலும், எண்ணிக்கைவீதாசாரத்தை விட அதிக அளவில் தமிழர்களே இடம் பெற்றிருக்கிறார்கள். பொருளாதார ரீதியில் சிங்களவர்களுக்கு பாதிப்பு ஏற்படாது என்று உறுதியளிக்கப்படுமானால், ஈழம்நிறுவுவதற்கு சிங்களவர்கள் எதிர்ப்பு தெரிவிக்கமாட்டார்கள்; என்னதான் இருந்தாலும், தம்மையார் ஆளுவது என்பதுபற்றிய முடிவை எடுக்கவேண்டியவர்கள் தமிழர்களேயாகும்.

—பி. எச். ஸி. மெண்டிஸ்
கண்டி.

## இவரைப் பற்றிய தகவல் ஏதாவது தெரியுமா?

எனது உடன் பிறந்த சகோதரன் க. கிருபாகரனின் விபரங்களை இக் கடிதம் மூலம் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

பெயர்:- கந்தசாமி—கிருபாகரன்

வயது:- 22

தொழில்:- 24 சிறீ 3205 எனும் லொறியில் “கிளீனர்.

காணமல்சென்ற விபரம்:- 15-08-77ல் “கொழும்பிற்கு சுண்ணுகத்தில் இருந்து பொருட்களை ஏற்றிக் கொண்டு சென்றார் கொழும்பில் இருந்து திரும்பும் வழியில் 17-08-77ல் கெக்கிராவையில் எரு ஏற்றி வருவதற்காகத் தங்கினார்கள். லொறியில் எரு ஏற்றப்பட்டு யாழ்ப்பாணம் வருவதற்கு ஆயத்தமான போது இனக் கலவரம் தொடங்கிவிட்டதாக அறிந்தார்கள். அன்று இரவு திரு. பி. சுப்பிரமணியம் அவர்களின் மில் வளவில் வேறு லொறிகளுடன் தங்கினார்கள். 18-08-77 காலை 9-30 மணியளவில் கோஷ்டியாக கலகக் காரர்கள் வந்து லொறிகளையும், ஆட்களையும் தாக்கத் தொடங்கினார்கள். லொறி ஆட்கள் பல திசைகளிலும் சிதறுண்டு உயிரைக காப்பதற்காக ஓடினார்கள். லொறிச் சாரதி ஒருவாறு தப்பி 20ந் திகதி இரவு இங்கு வந்து என்னிடம் நடந்த சம்பவத்தைக் கூறினார். அதன் பின்னர் பொலிசாரிடம் முறைப்பாடு செய்தேன். 4-09-77ல் நான் இராணுவத்தின் உதவியுடன் கெக்கிராவை சென்று அங்குள்ள பொலீசில் விசாரித்தேன். அவர்கள் ஐந்து தமிழ் லொறிக் காரர்களை வெட்டி “கலாவெவ” குளத்தில் போடப்பட்டதாகச் சொன்னார்கள். அதன் பின்னர் அவரைப் பற்றிய விபரங்கள் எனக்குத் தெரியவில்லை. அவர் வெட்டப்பட்ட ஆட்களில் ஒருவராக இருக்கலாமென எண்ணுகிறேன்.

எனது லொறியில் உள்ள பணம் 4000/. மற்றும் சாரதியின் லைசென்ஸ் யாவற்றையும் எடுத்து லொறியும் ஓடமுடியாதளவு உதிரிப்பாகங்களை களவெடுத்துச் சேதப்படுத்திக் காணப்பட்டது.

கிருபாகரன் மானிப்பாய் மேற்கு திருவள்ளுவர் சனசமூகநிலையத்தின்முதலாவது பொருளாளராகக் கடமையாற்றினார். மானிப்பாய் மெம்மோறியல் ஆங்கில பாடசாலையில் க. பொ. த (சா. தரம்) வரை பயின்றவர்.



எனது சொந்த லொறியிலேயே கிளீனராகக் கடமைபுரிந்தார்.

—க. மகேந்திரராசா
மானிப்பாய் மேற்கு
மானிப்பாய்

## ஒரு திருத்தம்

9-10-77 சுதந்திரனில் “யாழ் மாநகரசபையின் களவுகள் மேலும் அம்பலமாகலாம்” என்ற தலைப்பில் வெளியான செய்தியில் றேடி யேற்றர்கள் என்பதற்குப் பதிலாக றேடியோக்கள் என்று பிரசுரமாகியுள்ளது. இவ் அச்சுப் பிழையை றேடி யேற்றர்கள் என்று திருத்தி வாசிக்கவும் என்று வாசகர்களை கேட்டுக்கொள்கிறோம்.

## சுதந்திரன் முகவரி

சுதந்திரனுடன் தொடர்பு கொள்ளவேண்டியவர்கள் பின்வரும் தற்காலிக முகவரிக்கு எழுதுமாறு கோரப்படுகின்றனர்.

ஆசிரியர்
சுதந்திரன்,
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்,

## சுதந்திரன்’

[வாரமிருமுறை[

சந்தா விபரம்

ஓராண்டு — ரூபா 50.00
ஆறுமாதங்கள்—ரூபா 25.00

## சிங்கள இனவெறிக்கு பலியான தமிழர்கள்!


47 வயதான இவர் யாழ். வண்ணார்ப்பண்ணையைச் சேர்ந்தவர் அநுராதபுரம் நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தில் பிரதம இலிகிதராகப் பணிபுரிந்தவர். 18-8-77 அன்று அநுராதபுரம் கச்சேரிக்கு காலை 8 மணியளவில் சென்றபோது, அங்குள்ள சிங்கள ஊழியர்கள் உடனே இடத்தைக் காலிசெய்யும்படி கூறினார்கள் இனக்கலவரத்தைக் கேள்விப்பட்டு. தமது இருப்பிடத்திற்குத் திரும்பி வந்து புகையிரத நிலையத்திற்குச் செல்லும் வழியில், அநுராதபுரச் சந்தைக்கு முன்னால் வைத்து, காடையர்களினால் கல்லெறிபட்டும், கத்தியால் குத்தப்பட்டும்மிகப்பயங்கரமான முறையில் ஸ்தலத்திலேயே மரணமானார். இவ



ரது உடலைக்கூட யாழ்நகர் கொண்டுவர முடியவில்லை.

இவருக்கு மனைவியும், நான்கு பிள்ளைகளும் இருக்கிறார்கள் மூவர் பாடசாலை செல்லும் வயதினர்.

## அடையாளம் காட்டப்படாத இவர்?



16-8-77ல் யாழ்ப்பாணத்தில் பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியான ஒருவரான இவரது சடலம் நெடுநாளாகயாராலும் அடையாளம் காட்டப்படாமல் இருந்து புதைக்கப்பட்டது வாசகர்கள் அறிந்ததே. 7-9-77 புதன் சுதந்திரன் இதழில் பிரசுரமான இப் படத்தின் மூலம், அனலைதீவைப்பிறப்பிடமாகக்கொண்ட இவர் பெயர் சுப்பையா அருட்பிரகாசம், வயது 42 என்றும் இவர் நீண்டகாலமாக அளவையில் சொந்தமாக பிடவைக்கடையொன்றை வைத்திருந்ததாகவும் வியாபார விடயமாக யாழ்ப்பாணம் வந்திருந்தபோதே துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகினார் என்றும் இவரது உறவினர்கள் சுதந்திரனுக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற சிங்கள இனவெறிக் கொடுமையின் போது சிங்கள இனவெறியர்களால் மிருகத்தனமாக வெட்டிக் கொல்லப் பட்டவர்களில் இந்த 18 வயது இளைஞரும் ஒருவர் பொ. சிவகுமார் எனும் பெயருடைய இந்த இளைஞர் அநுராதபுரத்தில் 1972-ம் ஆண்டு முதல் கடையொன்று நடத்தி வந்தவர். இவருடைய வீடு தீக்கிரையாக்கப்பட்டது; இவரது கடை கொள்ளையடிக்கப்பட்டது. இந்த இளைஞர் இனவெறியர்களால் ஆடுமாடு வெட்டுவதுபோல கழுத்தில் வெட்டிக் கொல்லப்பட்டிருக்கிறார். இவரது தந்தை இறந்துவிட்டார்; தாய் வெளிநாட்டில் இருக்கின்றார் வேறு உறவினர் எவரும் கிடையாது. கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரியின் பழைய மாணவர் இவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய அரசுப் பேரவையில் அமிர்தலிங்கம் (2)

# "தனிநாட்டுக் கோரிக்கை முன்வைக்கப்பட்டு இரண்டரை ஆண்டுகளாகிவிட்டன!



## கலவரத்தை தூண்டியது எமது பேச்சு என்றால் யாராவது அதை சுட்டிக் காட்டலாமே'"

## முஸ்லிம் கடைகள் உடைக்கப்பட்டதற்கு யார் பொறுப்பாளிகள்?

"பதினைந்து நிமிடங்களுக்கு ஒருமுறை எமக்கு தொலைபேசி அழைப்புக்கள் வந்து கொண்டிருக்கின்றன. ஏதோ ஒரு இடம் தாக்கப்படுகிறது. ஏதோ ஒரு இடம் கொள்ளை அடிக்கப்படுகின்றது. அல்லது யாரோ ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார் என்ற செய்திகள் தொலைபேசியில் வந்து கொண்டேயிருக்கின்றன.

உறுப்பினர் ஒருவர்:- "நீங்கள் தான் பொறுப்பாளி"

திரு. அ. அ:- சபாநாயகர் அவர்களே! கௌரவ உறுப்பினர் நாம்தான் பொறுப்பாளிகள் என்று கூறுகிறார். நான் நினைக்கிறேன் கௌரவ அமைச்சர்களில் ஒருவர் சிறீலங்கா சுதந்திரக்கட்சி தான் பொறுப்பாளி என்று இச்சபையிலே சொல்லியிருக்கின்றார்.

உறுப்பினர் ஒருவர்:: அவர்கள் இதைப் பயன்படுத்துகின்றார்கள்.

திரு. அ. அ:- உண்மையிலேயே சிறீலங்கா சுதந்திரக் கட்சி அல்லது அக்கட்சியின் உறுப்பினர் சிலர்தான் பொறுப்பாளிகள் என்ற அடிப்படையில் அவர்களுட் சிலா வீட்டுக்காவலிலும் வைக்கப்பட்டுள்ளார்கள். கூழுக்கும் மீசைக்கும் ஒரே நேரத்தில் ஆசைப்படாதீர்கள். நீங்கள் தான் பொறுப்பாளிகள் என்று எங்களுக்குக் கூறிக்கொண்டு அதே நேரத்தில் அவர்கள்தான் பொறுப்பாளிகள் என்று அவர்களுக்கும கூறமுடியாது. இருவர் மீதும் பழி சுமத்தி உங்கள் பொறுப்பைத் தட்டிக் கழித்து பிறர் மீது பொறுப்பைச் சுமத்துகிறீர்கள்.

"ஐயா! இன்று பிற்பகல் புறகோட்டையில் இரண்டு முஸ்லிம்கள் வெட்டப்பட்டார்கள். இதில் ஏதாவது பிழை என்று இங்குள்ள பன்னிரண்டு முஸ்லிம் உறுப்பினர்களில் எவராவது கூறினார்களா? மாகோவில் மூன்று முஸ்லிம் கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

உறுப்பினர் ஒருவர்:- இப்பொழுது நீங்கள் முஸ்லிம்களையும் இழுக்கின்றீர்கள்.

திரு. அ. அ: நாங்கள் பொறுப்பாளிகள் என்கிறீர்கள். முஸ்லிம் கடைகள் தாக்கப்பட்டதற்கு நாங்களா பொறுப்பாளிகள்? கட்டவிழ்த்துவிடப்பட்ட காடையர்களையும் குண்டர்களையும் நீங்கள் அடக்க முடியவில்லையே என்பதனால் பொறுப்பாளிகள் நாம் என்று கூறிவிடமுடியாது. ஒத்திவைப்பு விவாதத்தின்போது கௌரவ பிரதமர் அவர்களே எனது பேச்சுக்கு அளித்த பதில்—நாமே இதற்குப் பொறுப்பாளிகள் என்ற குற்றச்சாட்டுக்கு தகுந்த பதிலாகும். நடந்துகொண்டிருக்கும சம்பவங்கள் பற்றித் திட்டவட்டமாக அவர் சொன்னார்: "மாகோவில் மூன்று முஸ்லிம் கடைகள் எரிக்கப்பட்டன. தெகிவலையில் குண்டர்களாற் தாக்கப்பட்ட வீடுகளுள் நான்கு, முஸ்லிம் வீடுகளாகும்." மீன்பிடி அமைச்சரே இதை ஒத்துக்கொண்டிருக்கிறார். சபைக்குள்ளேயோ வெளியேயோ நீங்கள் கூறமுடியுமா இதற்கு எந்த ஒரு முஸ்லிம் உறுப்பினர் பொறுப்பாயிருந்தார் என்று? (நிலைமையை மறைப்பதற்கு) உங்களுக்கு ஒருஏமாளி தேவைப்படுகின்றார்; அதற்கு வசதியானவர்கள் நாம் என்று கருதி எங்களைப் பார்த்துக் கத்துகிறீர்கள். இது இம்மியும் சரிவராத ஒரு விடயம். யார் பொறுப்பாளி என்பது தானா பிரச்சினை? நாட்டிற் சட்டமும் ஒழுங்கும் சிதைந்துவிடடது என்பதுதான் தெளிவான நிலை.

---

எதிர்க்கட்சி முதல்வர் நாவலர் அ. அமிர்தலிங்கம் அவர்கள் 'தமிழ் ஈழம்' திருத்தப் பிரேரணை மீது தேசிய அரசுப்பேரவையில் நிகழ்த்திய உரையின் முதலாவது பகுதி சென்ற வார சுதந்திரனில் இடம்பெற்றிருந்தது. இரண்டாவது பகுதி இங்கு இடம் பெறுகிறது.—ஆர்.

---

எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையிலும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணிப் பாராளுமன்றக் குழுவின் தலைவர் என்ற முறையிலும் பிரதமர் அவர்களுக்கு (21-8-77) ஞாயிற்றுக்கிழமை கடிதம் ஒன்று எழுதியிருந்தேன் நாட்டிற் தலைவிரித்தாடும் சட்டமீறல்களைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கும்படி மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் பிரதமரைக்கேட்டிருந்தேன் என்பதை ஏட்டிற் பொறித்து வைக்க விரும்புகிறேன். எனவே இங்குள்ள எவர் மீதாவது பழியைச் சுமத்தி விட்டுத் தாம் தப்பிவிடலாம் என்று உறுப்பினர்கள் நினைக்க வேண்டாம்.

"இன்றைய நிலைமைக்கு எமது பேச்சுக்களே பொறுப்பாயிருந்தன என்கிறார்கள். இந்தச்சபையிலோ வெளியிலோ எம்மவருள் எவராவது ஆற்றிய எந்த ஒரு பேச்சோ கூற்றோ எவரையாவது தூண்டி விட்டிருக்கக் கூடி[illegible] என்று என எடுத்துக்காட்டும்படி இங்குள்ள எவரையாவது கேட்டுக் கொள்கிறேன்.

உறுப்பிளர் ஒருவர்: நீங்கள் நாட்டைப்பிரிக்கவிரும்புகிறீர்கள்.

திரு: அ. அ:- (பேச்சுக்கள் என்றீர்கள்) இலங்கை மக்களைக் கிளறி விடுவதற்கு எமது பேச்சுக்களே பொறுப்பாயிருந்தன என்ற குற்றச்சாட்டுக்கு முதலிற் பதிலளிக்க விடுங்கள்!

ஜனாப்: எம். இ. எச். மஹ்றூப் (மூதூர்): மானிப்பாய் உறுப்பினர் (திரு. வி. தர்மலிங்கம்) சொன்னார் நல்லூரில் தாங்கள் ஒரு பாராளுமன்றம் அமைக்கப் போவதாக.

திரு. அ. அ:- இது ஆத்திர மூட்டலா? நல்லூரில் பாராளுமன்றம் அமைப்போம் என்று நாம் சொன்னால் அது ஆத்திரமூட்டல்! சரி, வர்த்தக அமைச்சர் கூறியது போல அவரது 'குருவும்' "வழிகாட்டியும்" ஆன காலஞ் சென்ற எமது தலைவர் திரு. சா. ஜே. வே. செல்வநாயகம் கூறியதை அவர் மீதுஎடுத்துவீச விரும்புகிறேன். காங்கேசன்துறை உபதேர்தலில் அவர்பெற்ற வெற்றியை அடுத்து 1975 ஜனவரி 6ந் திகதி அவர் பேசியிருந்தார். உள்ளூர்ப் பத்திரிகை எதனிலுமிருந்து நான் வாசிக்கவிலலை. பொறுப்பு வாய்ந்த நிறுவனமொன்றாகிய இலண்டனிலிருக்கும் சிறுபான்மையோர் உரிமைக்கழகத்தின் பிரசுரம் ஒன்று இது இதை எழுதியவர் வால்ட்டர் சுவோட்ஸ்

'அவர்மீண்டும் தெரிவுபெற்ற பின் நிகழ்த்திய வெற்றியை ஏற்கும் பேச்சிலே ஏற்கனவே தமிழ்மக்கள் கொண்டிருக்கும் இறைமையைப் பிரயோகித்துத் ஈழத்துத் தமிழினம் சுதந்திரம் காண வேண்டும் என்பதற்கான அதிகாரமே இந்தத் தேர்தல் முடிவு எனத் தாம் கருதுவதாகக் கூறினார்!

இது கூறப்பட்டது 2 1/2 ஆண்டுகளுக்கு முன்பு அப்பொழுது கொலைகள் எதுவும் விழவில்லை. அப்போதைய பிரதமர் இப்போதையவரிலும் பார்க்கக் கூடிய சக்தி படைத்தவர் என்பது இதற்குக் காரணமா?

அம்மட்டல்ல, காங்கேசன் துறை உபதேர்தலில் மக்கள் தந்த தத்துவத்தின் அடிப்படையில் இதே சபையில் அதையடுத்து தமிழர் விடுதலை முன்னணி உறுப்பினர்கள் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்கள்: எப்போதோ— 1975ல் அந்தப் பிரேரணை சமர்ப்பிக்கப் [illegible] இரண்டு ஆண்டுகளாக இந்த நாட்டில் (குழப்பம்) எதுவும் நடந்ததில்லை.

உறுப்பினர் ஒருவர்:- மக்கள் பட்டினியாய் இருந்தார்கள்.

திரு.- லலித் அத்துலத் முதலி வர்த்தக அமைச்சர்:- உங்கள் இளைஞர்கள் இரண்டாண்டு காலமாகச் சிறையிலிருந்தார்கள்.

திரு: அ. அ:- அது உண்மைதான் ஆனால் அது எங்கள் பிரேரணையின் விளைவாக நடந்ததல்ல. பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராளுமன்றத்தில் பிரேரணை ஒன்றைச் சமர்ப்பித்தார்கள் என்பதற்காக இளைஞர்களை ஒருவர் சிறையிற் போட முடியாது.

திரு: ஆர். பிரேமதாச:- அதுதான் முந்திய பிரதமரின் திறமை. அவர் எல்லோரையும் சிறையில் அடைத்தார். அதைத்தானா திறமை என்கிறீர்கள்?

திரு. அ. அ:- முந்திய அரசாங்கத்தின் சார்பில் நான் இங்கு வக்காலத்து வாங்க வரவில்லை. எங்களிலும் பார்க்க வேறு எவராவது அவர்கள்மீது அதிக மனத் தாங்கல் கொண்டிருக்க முடியாது. நான் இங்கு அவர்கள் நியாயம் பேசவில்லை எனது எண்ணத்தை கௌரவ உறுப்பினர்கள் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஏதோ இந்த மாதத்திலோ, இந்த ஆண்டிலோதான் இடம் பெற்ற புது அலுவல் அல்ல நாம் இந்தச் சபையில் இந்தத் (தமிழ்ஈழம்) திருத்தத்தை கொண்டுவந்தது. இதனை எடுத்துக் காட்டுவதற்காகவே நான் இங்கு இதைக் குறிப்பிடுகின்றேன்.

திரு. காமினி திசநாயகா:- ஐயா! கௌரவ எதிர்க்கட்சித் தலைவர் இதைத் தெளிவுபடுத்த வேண்டும் என்று விரும்புகின்றேன். அரசாங்கத் தரப்பினரின் நியாயம் ஒன்று தொடர்பான காத்திரமான கூற்றொன்றை அவர் கூறுகிறார். அவர் குறிப்பிட்ட கட்டுரை காலஞ்சென்ற திரு. செல்வநாயகம் உயிருடன் இருந்த காலத்தில் 1975ல் பிரசுரிக்கப்பட்டது. இது சரிதானா?

திரு. அ. அ: ஆம்.

—5-ம் பக்கம் பார்க்க

---

## சுதந்திரன் வளர்ச்சிக்கு நீங்களும் உதவலாம்!

தமிழ் தேசிய இனத்தின் ஒரேயொரு விடுதலைக் குரலான சுதந்திரன் தமிழ் ஈழத்திலிருந்து வெளிவரவேண்டும் என்பது சுதந்திரன் வாசகர்களின் நீண்டகால ஆசையாகும்.

ஆகஸ்ட் பிற்பகுதியில் சிங்கள சிறீலங்காவில் நடைபெற்ற தமிழினப் படுகொலையை அடுத்து 4-9-77 முதல் உங்கள் சுதந்திரன் ஏடு தமிழ் ஈழத்தின் தலைநகர்களில் ஒன்றான யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருவதை அறிவீர்கள். இது தற்காலிக ஏற்பாடாக இன்றி நிரந்தர ஏற்பாடாக மாறவேண்டும் என்பதே தமிழ் நெஞ்சங்களின் இதய ஆசையாகும்.

சுதந்திரனை யாழ்ப்பாணத்திலிருந்தே நிரந்தரமாக வெளியிடச் செய்வதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இப்போது நடைபெற்றுவருகின்றன. இத்துறையில் சுதந்திரன் வாசகர்களும் தமிழ் பேசும் மக்களும் எமக்குக் கைகொடுக்க வேண்டியது அவசியமாகும். இதற்கு ஒரு திட்டத்தை வகுத்துள்ளோம். தமிழ் ஈழத்தில் ஒரு தொகுதிக்கு குறைந்தது 100 பேரையாவது சுதந்திரனுக்கு சந்தாதாரராகசேர்த்துக்கொள்வதே நமது திட்டமாகும்; சுதந்திரன் ஓராண்டுச் சந்தா ரூபா ஐம்பதுமட்டுமே. ரூபா ஐம்பது செலுத்தி சந்தாதாரராக உங்களைப்பதிவு செய்து கொள்வதன் மூலம் சுதந்திரன் தமிழ் ஈழத்தில் நிலைபெற்று வளரவும், அதே சமயம் சுதந்திரன் இதழ் வாரம் இருமுறை உங்களைத்தேடி உங்கள் வீட்டுக்கு வரவும் வழி செய்தவர்களாவீர்கள்!

சுதந்திரன்— சந்தா சேகரிப்பு திட்டத்திற்கு உதவக்கூடிய— உதவ விரும்பும் அன்பர்களை தயவு செய்து உடனடியாக எம்முடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆசிரியர்
சுதந்திரன்
238, பிரதான வீதி
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




றேயல் நிலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்றுமோர் தயாரிப்பு

**றேயல் ஜெலி கிறிஸ்டல்**

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

றேயல் பேக்கிங் பவுடர்
றேயல் கஸ்டட் பவுடர்
றேயல் கோன் பிளவர்
றேயல் பிஸ்மக்ஸ்
றேயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்
**சிவா இண்டஸ்ட்ரீஸ்**
112-1/3 நாலாம் குறுக்குத்தெரு கொழும்பு-11


# இலங்கைத் தமிழர் தங்கள் சொந்தக்....

—4-ம்பக்கத் தொடர்

"கடந்தமாதம் நிகழ்ந்த தமிழர் எதிர்ப்பு கலவரத்தின் விளைவாக ஏராளமான இந்தியத் தமிழர்கள், அவர்கள் வேலை செய்துவந்த தோட்டங்களிலிருந்து வெளியேற்றப்பட்டு,அந்த இடங்கள் சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு விட்டன.

"எல்லாவற்றையும்இழந்த நிலையில்—வீடின்றி வாசலின்றி—சொந்த நாடின்றி—நிதி உதவியின்றிஎதிர் காலம் பற்றியநம்பிக்கை ஏதுமின்றி இந்தமக்கள் அகதிமுகாம்களிலேயே இருக்கின்றனர். அண்மையில் நிகழ்ந்த கலவரத்தின் துன்பரேகைகள் பலரிடம் படிந்து காணப்படுகின்றன. எரியூட்டல். கற்பழிப்பு, கொலைபோன்ற பல கொடுமைகளால் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சிலர் உடுத்த துணியுடனே ஓடியிருக்கின்றனர்.

"அகதிமுகாமிலிருந்து திரும்பி தமது வீடுகளுக்கு சென்ற சிலர் அங்கு மறுபடியும் தாக்கப்பட்டு மீண்டும் அகதிமுகாம்களுக்கே ஓடிவந்து விட்டனர்.

"ஒரு தாய், தனது கண் முன்னலேயே தனது அன்பு மகள்கள் கற்பழிக்கப்பட்டு பின் கொலை செய்யப்பட்டதையும் நேரில் கண்ட, ஏக்கத்தால் சித்தப்பிரமை அடைந்து விட்டாள். எல்லோரும் தம்மிடமிருந்த உடமையனைத்தையும் இழந்து விட்டனர்; முன்பு போல இனி வாழ முடியும் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு அறவே இல்லை!"


"நீம் சுகாதார தூபம்"

வேம்பினின்றும் நவீன முறையில் தயாரான "நீம் சுகாதார தூபம்" நறுமணம் கமழ்ந்து, பூச்சி, புழு ஆகியவற்றை அற்புதமாக அகற்றுகின்றது. வாங்கி உபயோகியுங்கள்.

ஓர் மில்க்வைற் தயாரிப்பு

---

**கிங்ஸ்லி** (கொழும்பு) — 11-வது வெற்றி வாரம்!

சிவஜி கணேசன், தேவிகா, கமலஹாசன், ஜெயசித்திரா, மஞ்சுளா— நடித்த

# சத்யம்

(ஈஸ்ட்மன் கலர்)

2-வது வாரம்

**பிளாசா**

ஜெமினி, கே. ஆர், விஜயா நடித்த-

# தசாவதாரம்

[ஈஸ்ட்மன் கலர்[

**வெலிங்டன** (யாழ்நகர்) — 3-வது வாரம்

ஜெய்சங்கர்
— நடித்த —

# துணிவே துணை

(கலர்)

5-வது வாரம்

**கெப்பிட்டல்** (கொழும்பு)

ஜெய்சங்கர், முத்துராமன், பத்மினி நாகேஷ்
—நடித்த—
தேவரின்

# பெண் தெய்வம்

**லிடோ** (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ஆர். லதா
நடித்த —

# நீதிக்கு தலை வணங்கு

(ஈஸ்ட்மன் கலர்)

---

11-வது ஜனத்திரள் வாரமாகக் காட்சியளிக்கிறது!

**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை)

தினசரி பி. ப. 2-15, மாலை 6, இரவு 9.30

மக்கள் திலகம் எம். ஜி. ஆர்., லதா, பவானி தங்கவேலு, நாகேஷ், கண்ணன்

மற்றும் பவர் நடித்த

# உழைக்கும் கரங்கள்

(ஈஸ்ட்மன் கலர்)

2-வது வாரம்

**கெயிட்டி** [கொட்டாஞ்சேனை]

ஜெமினி கணேசன், சௌகார் ஜானகி, கே. ஆர். விஜயா, ஜெயசித்ரா, ஸ்ரீபிரியா, எம். ஆர். ராதா, ரவிகுமார், சீர்காழி கோவிந்தராஜன், எம். ஆர். ஆர். வாசு, வீ. எஸ் ராகவன், கோபி கிருஷ்ண, மேஜர் சுந்தரராஜன் நடித்த-

# தசாவதாரம்

(ஈஸ்ட்மன் கலர்)


இப்பத்திரிகை கொழும்பு -12, 194ஏ, பண்டார நாயக்கா வீதியிலிருக்கும் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1977ம் ஆண்டு அக்டோபர் மாதம் 16ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. அச்சு பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org